தமிழ் வருடாந்தர மாநாடு
மெதடிஸ்ட் பெண்கள்

கிறிஸ்துவ இல்லம் மற்றும் குடும்ப வாரம்

---

நம் த.வ.மா. திருச்சபைகளின் மெதடிஸ்ட் பெண்களே,

கிறிஸ்துவில் அன்பான சகோதரிகளே,
நம்முடைய ஆண்டவரான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இவ்வருடத்தின் கிறிஸ்துவ இல்லம் மற்றும் குடும்ப வாரமும் கடந்த ஆண்டு கருப்பொருளை போலவே: 'தேவ மகிமையை தேடும் குடும்பம்'. நம் குடும்பங்கள் தேவனை பிரியப்படுத்தும் போதும் அவருடைய மகிமையை வெளிப்படுத்தும் போதும், நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம். இவ்வருடம் ஜுன் 17 – 23ஆம் தேதி வரை இந்த வாரம் அனுசரிக்கப்படும்.

இவ்வாரத்துக்கான தலைப்புகள்:

நாள் 1: திருமணத்தை கட்டுவது – தனிமையை மேற்கொள்வது மற்றும் ஒருமைபாட்டை உருவாக்குவது

நாள் 2: இல்லத்தில் ஒளி வீசுவது – ஊழியம் மற்றும் குடும்பத்தில் சரிசமம்

நாள் 3: கிறிஸ்தவ தகப்பனின் பங்கு

நாள் 4: குடும்பத்தில் தாத்தா பாட்டியின் பங்கு

நாள் 5: இளம் தாய்மார்களுக்கான பயிற்சியின் கோட்பாடுகள்

நாள் 6: வாலிபர்களை வளர்ப்பது: நவீன உலகம், இன்டர்நெட் மற்றும் பல

நாள் 7: ஏன் பிள்ளைகள் பாதுகாக்கப்படவில்லை?

சேகரிக்கப்படும் காணிக்கைகள் உங்களுடைய ஸ்தல மெதடிஸ்ட் பெண்கள் ஊழியங்களுக்காக பயன்படுத்தப்படும். இந்த சாதனங்கள் மிகவும் பிரயோஜனமுள்ளதாகவும் உங்களுக்கு ஆசீர்வாதமானதாகவும் இருக்கும் என்று நான் ஜெபிக்கின்றேன். இந்த வாரத்தை நம் கணவர், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தில் உள்ள மற்றவர்களோடு சேர்ந்து அனுசரித்தால் இன்னும் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று நான் விசுவாசிக்கின்றேன்.

ஆசீர்வாதமான கிறிஸ்துவ இல்லம் மற்றும் குடும்ப வார வாழ்த்துக்கள்.

அவருடைய சேவையில்,

ஜென்சி ஷாம்
(கிறிஸ்தவ கல்வி ஒருங்கிணைப்பாளர்)

உறுதிப்படுத்தினது,

திருமதி. கனி ஜெய்பால்
(தலைவி)

## நாள் 1: திருமணத்தை கட்டுவது – தனிமையை மேற்கொள்வது மற்றும் ஒருமைபாட்டை உருவாக்குவது

வாசிப்பு: பிலிப்பியர் 2:1-4

சுயநலத்தையும் தனிமையையும் தோற்படிப்பது ஒருமைபாட்டை உருவாக்கவும் தேவதன்மையுள்ள திருமணத்துக்கும் முக்கியமானதாக இருக்கிறது. ஒருவரோடு ஒருவர் நெருக்கமான தனிப்பட்ட உறவுக்காகவே மக்கள் திருமணம் செய்கிறார்கள். ஆனால் இது இயற்கையாக வரவில்லை. ஏன்?
சுயநலம் பொதுவான பிரச்சனை - இருவரும் தங்களுடைய சொந்த வழியில் செல்கின்றார்கள் மற்றும் காரியங்களை தங்களுடைய இஷ்டத்துக்கு செய்ய விரும்புகிறார்கள். ஏசாயா 53:6 – திருமணத்தில் தோல்வியைக் குறித்து விவரிக்கிறது. 'அவனவன் தன் தன் வழியிலே போனோம....', இதுதான் சுயநலம். திருமணத்தில் சுயநலம் தனிமைக்கு வழிவகுக்கிறது. நெருக்கத்துக்குப் பதிலாக பிரிவுகள் உண்டாகிறது. தனிமையின் முடிவுகள் - தவறாக புரிந்து கொள்ளுதல், பெருமை, மனக்கசப்பு மற்றும் மற்ற காரியங்கள்.
நாம் எப்படி ஒருமையை அடைவது? திருமணத்தில் ஒருமையை அடைய கணவன் மனைவியாக தேவனிடத்தில் தங்கள் இல்லத்தைக் கட்ட சொல்லி மன்றாட வேண்டும். வேதம்: தேவனின் செயல்திட்டமாக - தனிமைக்குப் பதிலாக ஒருமை.
ஒருமைபாட்டின் நன்மைகள்:
உறவுகளில் ஒருமையின் நன்மைகளை குறித்து கீழ்க்காணும் வசனங்கள் நமக்கு போதிக்கிறது – சங்கீதம் 133:1 மற்றும் பிரசங்கி 4:9-12. ஒருவரோடு ஒருவரின் ஒற்றுமையை திருமணத்தில் ஒருமை காண்பிக்கிறது.
ஒருமையை அடைவது:
கேள்வி: திருமணத்தில் ஒருமையைக் குறித்து சமுதாயம் என்ன சொல்கிறது?
பதில்: திருமணத்தில் கடுமையாக உழைப்பது, தனிப்பட்ட உறவை மேம்படுத்துவது, வீட்டு பொறுப்புகளை பகிர்ந்து கொள்வது.
கேள்வி: ஒருமையை அடையாமல் இருப்பதற்கான சில காரியங்கள் யாவை?
பதில்: உறவில் தேவனின் ஈடுப்படுதல், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிதல். சுயநலம் பிரச்சனைகளுக்கு மூல காரணமாக இருப்பதை அறிந்து, அதை சரிப்படுத்துவது. தேவன் ஒருவர் மாத்திரமே சுயநல சுபாவத்தை மாற்ற முடியும்.
பிலிப்பி சபையின் கடிதத்தில், கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ள ஒருமையைக் குறித்து சொல்கிறார். (பிலிப்பியர் 2:1-4) இப்படி சொல்கிறது, 'அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக'.

முடிவுரை: ஒருமைபாட்டை அடைய 4 படிகள் -
- நோக்கத்தில் உறுதி
- பிரச்சனைகளை மேற்க்கொள்வது
- ஒன்றாக நடப்பது
- சரியான வழியில் கட்டுவது (வேதம்)

### கலந்துரையாடல் கேள்விகள்

1. உங்கள் திருமணத்தில் சுயநலத்தால் உள்ள சில பிரச்சனைகள் யாவை? 3 குறிப்பிடவும் பகிர்ந்து கொள்ளவும்.
2. இன்றைய திருமணங்கள் உடையாமல் இருக்கும் காரணங்களை புரிந்து எப்படி கணவன் மனைவி இல்லத்தைக் கட்ட முடியும்? (மத்தேயு 7:24-27)
3. உறவுகளில் ஒருமையை அடைய பிலிப்பியர் 2:2 என்ன சொல்கிறது?

நாள் 2: இல்லத்தில் ஒளி வீசுவது – ஊழியம் மற்றும் குடும்பத்தில் சரிசமம்

வாசிப்பு: நீதிமொழிகள் 3:5-6

அதிகமான பெண்கள் தங்களின் உணர்வுகளினால் போராட்டத்தில் இருக்கின்றனர். மனைவி, தாயார் பொறுப்பில், உடல் மெலிவு, நம்முடைய தோல்விகள் மற்றும் வெற்றிகளை வைத்து தேவன் நம் தரத்தை மதிப்பிடுவது இல்லை. நாம் எல்லாரும் பல நேரங்களில் தவறுகிறோம். தாயாராக மற்றும் மனைவியின் பொறுப்பிலிருந்து நாம் சில நேரம் வீழ்ந்து போகிறோம். ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிக்கிறார். தேவனின் கண்களில் அவரை நோக்கி பார்க்க நாம் அறிந்திருக்க வேண்டும். இஸ்ரவேலர்களுக்கு தினமும் போதுமான மன்னாவை தேவன் அளித்ததை நாம் அறிந்திருக்கிறோம் (யாத்திராகமம் புத்தகம்).
ஏன் தேவன் அவர்களை ஒரு வாரத்துக்குத் தேவையான மன்னாவை சேர்த்து வைக்க அனுமதிக்கவில்லை? காரணம், அவர்கள் ஒவ்வொரு நாளும் தேவனிடத்தில் வந்து அவர்களுக்கு தேவையானதை பெற்று கொள்ள வேண்டும் என்பதற்காக என்று நான் விசுவாசிக்கின்றேன். அவர்கள் அன்றாடம் தேவனை சார்ந்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நம்மிடத்திலிருந்தும் அதைதான் அவர் எதிர்ப்பார்க்கிறார்.

ஊழியம் மற்றும் குடும்பம்
ஊழியம் மற்றும் குடும்பத்துக்கு நேரத்தை சரிவரையாக ஒதுக்குவது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் தேவனிடத்தில் நம் நாளை அர்ப்பணிக்கும் போது வித்தியாசம் காணப்படும். (நீதிமொழிகள் 3:5-6).

1. உங்கள் கணவரோடு சிந்தையின் சந்திப்பை நடத்துவது
   நம் கணவருக்கு சிறப்பான மனைவியாக இருக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்று நாம் அறிந்திருக்கிறோம் என்று நாம் எண்ணுகிறோம். பூரணமான மனைவியாக இருக்க நாம் ஓடுகிறோம். நல்ல மனைவிக்கான அர்த்தத்தை நம் கணவரிடம் கேட்போம், அவருடைய பதில் நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். பல நேரங்களில், பூரணமான மனைவிக்கான நம்முடைய பட்டியல் நீளமானதாக இருக்கலாம்.

2. வேண்டுமென்று கிடைக்கும் அட்டவணை
   உங்களின் கூட்டங்களின் சந்திப்புகளின் அட்டவணையை குறித்து உங்கள கணவரோடு கலந்துரையாடவும். அவருடைய ஆசீர்வாதத்தோடு எல்லாவற்றையும் நீங்கள் சிறப்பாக செய்யலாம். முக்கியம் என்னவென்றால் நீங்கள் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் மற்றும் உரையாட வேண்டும்.

3. உங்கள் பிள்ளைகளோடு காத்திருங்கள்
   தாய்மார்களான நம்முடைய பொறுப்பு – நம்முடைய இல்லத்தில் பிள்ளைகளுக்கு இவை மூன்றும் கிடைக்க வேண்டும்: அன்பு, ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் கனம். அவர்களுக்கு இம்மூன்றும் இல்லத்தில் கிடைக்கும் போது, அவர்கள் வெளியே தேட மாட்டார்கள். பிள்ளைகள் சிறப்பான அருட்பணி – நமக்கு கிடைத்த ஊழியம். நம்முடைய ஊழியம் சிறப்பாக நிறைவேறும், பல நேரங்களில் நம்மை தகுதியான தாயாக மாற்றும். நம்முடைய முன்னுரிமையான ஆசீர்வாதம் காக்கப்பட வேண்டும்.

4. சில நேரங்களில் இல்லை என்பது சிறப்பான பதில்
   சில நேரங்களில் நம்முடைய ஊழிய வாய்ப்புகள் மற்றும் குடும்ப பொறுப்புகள் மத்தியில் மோதல் ஏற்படலாம். இந்த மாதிரி நேரங்களில், அதை மற்றவர்களுக்கு கொடுக்க, வேறு நாள் அதை செய்ய அல்லது முடியாது என்று சொல்ல முடியும். உங்கள் குடும்பத்தின் தேவைகளில் ஈடுபடவும், உங்களை வருத்தி

கொள்ளாமலும் இருக்க, இதை முன்கொட்டியே செய்வது மிகவும் உறுதுணையாக இருக்கும்.

<u>கலந்துரையாடல் கேள்விகள்</u>

1. நம்மில் எத்தனை பேர் நம் வாழ்க்கையில் எல்லா பகுதியிலும் சரியாக மற்றும் சமநிலையாக நடத்தி வருகிறோம்? பதில் இல்லை என்றால், உங்களுடைய குறைவுகளை பட்டியலிடவும் மற்றும் பகிர்ந்துக் கொள்ளவும்.

2. உங்கள் போதகர் ஒரு குறிப்பிட்ட பொறுப்பை நீங்கள் திருச்சபையில் எடுக்க கேட்கிறார், வேறு யாரும் முன்வராததினால். நீங்கள் எடுத்தால், உங்கள் குடும்பத்தோடு உங்களுக்கு பிரச்சனை ஏற்படும். நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் செய்தால், அதின் பாதிப்புக்கள் என்னென்ன?

நாள் 3: கிறிஸ்தவ தகப்பனின் பங்கு

வாசிப்பு: உபாகமம் 6:5-7, நீதிமொழிகள் 22:6, எபேசியர் 6:4

கிறிஸ்தவ தகப்பன்மார்களைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது?

கிறிஸ்தவ தகப்பன்மார்கள் தேவனின் கரத்தில் ஒரு கருவியாக இருக்கின்றனர். வழிநடத்தும் மற்றும் கண்டிக்கும் காரியங்கள் அனைத்தும் தேவனின் கட்டளைப்படியும் அவர் விரும்பும்படியும் இருத்தல் அவசியம். இதனால் தேவனுடைய அதிகாரம் பிள்ளைகளின் சிந்தை, உள்ளம் மற்றும் மனசாட்சியில் தொடர்ச்சியான மற்றும் உடனடியான தொடர்பை ஏற்படுத்தும்.

அதிக கவனமாக, தொடர்ச்சியான பயிற்சியோடும் ஜெபத்தோடும் கண்டிக்கும் காரியங்கள் செய்யப்பட வேண்டும். தேவ வார்த்தையின் மற்றும் ஆலோசனையின் உதவியோடும் உற்சாகத்தோடும் செய்வது முக்கியம். தேவனுக்கு கனத்தை கொடுக்க, பெற்றோரின் அதிகாரத்தை மதிக்க, கிறிஸ்தவ தன்மைகளின் ஞானம் பெற மற்றும் தன்நடக்கத்தின் பழக்கங்கள் பிள்ளைகளில் வளர கிறிஸ்தவ கண்டிப்புகள் தேவை.

பிள்ளைகளுக்கு வேத வசனத்தைத் தெரியப்படுத்துவது ஒரு தந்தையின் பொறுப்பு (2 தீமோத்தேயு 3:16-17). தகப்பன் உண்மைத்துவத்தின் மாதிரியாக இருக்கும் போது, பிள்ளைகள் எங்கு போனாலும் என்ன செய்தாலும், அவர்கள் உலகில் வாழும் நாட்கள் எல்லாம் தேவன் அவர்களை நல்ல நிலையில் நிறுத்துவார் என்று பிள்ளைகள் கற்றுக்கொள்வார்கள்.

கிறிஸ்தவ தந்தைகள் செய்யக்கூடிய 5 காரியங்கள்:

1. அவர்கள் குடும்பத்துக்காக நேரம் ஒதுக்குவது
   நல்ல கிறிஸ்தவ தகப்பன் தன் குடும்பத்துக்காகவும் கிறிஸ்துவில் குடும்பத்தினரை வழிநடத்தவும் நேரம் ஒதுக்குகிறான். குடும்பத்தின் தேவையை சந்திக்கிறான். பெற்றோரை தவிர வேறு எந்த ஆசிரியராலும் பிள்ளைகளை அதிகமாக பாதிக்க முடியாது. இந்த காரணத்தினால், வார்த்தையின் மூலம் மற்றும் எடுத்துக்காட்டின் மூலம் தகப்பன் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். அவர்கள் குடும்பத்தின் உடல்ரீதியான தேவையை மட்டுமல்ல, உள்ளான தேவைகளையும் சந்திக்க வேண்டும். எல்லா காரியங்களுக்கும் குடும்பத்துக்கு உறுதுணையாக இருப்பதோடு தன்னால் இயன்றதை சிறப்பாக கொடுக்க வேண்டும்.

2. அவர்கள் மனைவியை நேசிப்பது மற்றும் மதிப்பது
   அவர் தன் மனைவியை நேசிப்பார் மற்றும் மதிப்பார். அன்பான உறவு எப்படி இருக்கும் என்று தன் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாக அவர் வாழ்க்கை பிரதிபலிக்கும், குறிப்பாக அவர்களுடைய திருமண வாழ்க்கை என்று வரும்போது. தேவனுடனான உறவின் உதவியினால், கிறிஸ்தவ கணவனின் இப்பொறுப்புக்களை செய்ய பெலன் கிடைக்கும். தேவ ஆவியின் மேல் சார்ந்திருப்பது அவசியம். தேவ வல்லமையை கேட்க வேண்டும். மனைவிக்கு தேவையானதை கொடுப்பார்கள் - அன்பு, கனம் மற்றும் மகிழ்ச்சி.

3. அன்பாக திருத்துவது மற்றும் கண்டிப்பது
   கொலோசெயர் 3:21 இப்படி சொல்கிறது, “பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.” ஒரு கிறிஸ்தவ தகப்பன் கண்டிக்க மட்டும் மாட்டார். அன்பாக திருத்துவார் மற்றும் கட்டளையிடுவார். எவ்வளவுதான் வெறுப்புடனும் கோபத்துடனும் இருந்தாலும் கூட, பிள்ளைகளின் நலன் கருதி, அன்பான கருசனையோடு வெளிப்படுத்துவார். இதில் ஆலோசனை, திருத்தம், கல்வி எல்லாம் அடங்கும். வழக்கமாக தகப்பன்

பிள்ளைகளுக்கு கட்டளைகள் கொடுப்பது, மிகவும் உதவிகரமான ஒன்றாக இருக்கும். இதன் மூலம் பிள்ளைகளின் குணாதிசயங்கள் மேம்படும்.

4. <u>நன்றாக பேச முடியும்</u>
வேதத்தை குறித்து மட்டும் பேசுபவர்களாக இல்லை, ஆனால் செவிக்கொடுப்பவர்களாகவும் இருக்க வேண்டும். உடனடியாக நியாயம் தீர்க்காமல், அமைதியாக கேட்க வேண்டும். தகப்பன் சீக்கிரம் கோபப்படுபவர் என்று பிள்ளைகள் அறிந்திருந்தால், அவர்களின் உள்ளான உணர்வை அவர்கள் வெளியே சொல்ல மாட்டார்கள். தகப்பன் அமைதியாக செவிக்கொடுப்பவர் என்று அறிந்தால், அவர்களை மதிக்கிறோம் மற்றும் அவர்கள் சொல்வதைக் கேட்பதில் ஆர்வம் காட்டுகிறோம் என்று அவர்கள் புரிந்து கொள்வார்கள். வேதம் நமக்கு சொல்கிறது, 'கேட்பவர்களாக இருக்க வேண்டும், கோபப்படுகிறவர்களாக இருக்கக்கூடாது.'

5. <u>தேவனின் நடைமுறை ஞானத்தை பயன்படுத்துவது</u>
ஒரு கிறிஸ்தவ தந்தை, தேவனின் நடைமுறை ஞானத்தை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவார், பிள்ளைகளையும் அந்த வழியில் நடத்துவார். உபாகமம் 6:5-6 சொல்கிறது, 'நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது'. தேவனுடன் ஒப்புக்கொடுத்தலான உறவு இருக்கும் தந்தைகள், தங்கள் பிள்ளைகளையும் தேவனின் உறவில் வழிநடத்த முடியும் - அவர்களின் பரலோக தந்தையுடனான நெருக்கமான உறவில்.

<u>கலந்துரையாடல் கேள்விகள்</u>

1. மார்டின் லூதர் இப்படி சொல்கிறார், 'தடியின் பக்கத்தில் ஆப்பிளை வைத்திருக்கவும், பிள்ளை சரியானதை செய்யும் போது கொடுத்து பாராட்ட'. கலந்துரையாடவும் மற்றும் பகிர்ந்துக் கொள்ளவும்.

2. எபேசியர் 6:4, இரண்டு வகையான தந்தையை குறித்து பேசுகிறது. நல்ல மற்றும் கெட்ட. அவை யாவை மற்றும் இதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்ள முடியும்?

3. மனைவி, பிள்ளைகள், தேவனின் ஊழியம். ஒரு தகப்பனின் வாழ்க்கையில், முக்கியத்துவத்தின் அடிப்படையில் எப்படி மதிப்பிடுவீர்கள்?

நாள் 4: குடும்பத்தில் தாத்தா பாட்டியின் பங்கு

தாத்தா பாட்டியின் 4 வேதாகம பங்குகள்

1. ஆசீர்வதிப்பவர்களாக தாத்தா பாட்டி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (நீதிமொழிகள் 10:17)
   ஆசீர்வதிப்பவர்களாக:
   ஆவிக்குரிய வழியில்:
   - அவர்களுக்காக ஜெபிக்க மற்றும் அவர்களோடு ஜெபிக்க
   - அவர்களுடைய வளர்ச்சியில் மற்றும் வரங்களில் ஊக்குவிக்க
   - தேவனின் விசேஷமான படைப்பாக அவர்களை கனம்பண்ண

   உணர்ச்சியின் வழியில்
   - அவர்களுடைய சாதனைகளைக் கொண்டாடுவது
   - அவர்களுடைய பாடுகள் மூலம் இவர்களை உற்சாகப்படுத்துவது
   - எப்போதும் அளவற்ற அன்பை கொடுப்பது

   சரீர வழியில்
   - அவர்களை எப்பொழுதும் வரவேற்க்கும் இல்லத்தை ஏற்படுத்திக் கொடுப்பது
   - அவர்களை எப்பொழுதும் பாதுகாக்கும் கரத்தை ஏற்படுத்திக் கொடுப்பது
   - அவர்களை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பது

2. நீதிமான்களாக தாத்தா பாட்டி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (நீதிமொழிகள் 20:7)
   நீதிமான்களாக இருக்க வேண்டும்:
   தேவ தன்மையுள்ள வாழ்க்கையின் மூலம் உங்கள் குடும்பத்துக்கு கனத்தைக் கொண்டு வருவது
   - பொதுவாகவும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நீதிமானாக வாழ்வது
   - உங்களோடு இருப்பவர்களிடத்தில் உள்ள சிறப்பானதை வெளிக்கொண்டு வருவது

   வெளிப்படையான முன்னோக்கத்தோடு முடிவு செய்வது
   - சிறப்பாக முடிப்பது – சிந்தையில் எப்போதும் முடிவான குறிக்கோள் வைத்திருப்பது
   - மனிதர்களை நேசித்து, சாதனங்களை பயன்படுத்த வேண்டும். சாதனங்களை நேசித்து, மனிதர்களை பயன்படுத்தக்கூடாது.

   உங்களுடைய பேரப்பிள்ளைகள் பின்பற்ற ‘நல்ல காரியங்களை’ விட்டு செல்வது
   - நீங்கள் ஏன் செய்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள்? என்று அவர்களுக்கு தெரிவிக்கவும்
   - உண்மையுள்ள வாழ்வுக்கான எடுத்துக்காட்டாக இருப்பது

3. நற்செய்தி அறிவிப்பவர்களாக தாத்தா பாட்டி இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (சங்கீதம் 71:18)
   நற்செய்தி அறிவிப்பவர்களாக இருப்பது
   சுவிசேஷம் குறித்து – உங்கள் பேரப்பிள்ளைகளுக்கு மற்றும் சமுதாயத்துக்கு
   - சுவிசேஷத்தின் சத்தியத்தை உங்கள் பேரப்பிள்ளைகள் கேட்டிருக்க வேண்டும்
   - தேவனுடைய நேரத்தில் பரிசுத்த ஆவி அவர்களை வனைய விசுவாசிப்பது

- அவ்விசுவாசிகளிடத்தில் கருசனை மற்றும் அக்கறை
- நன்னெறி காரியங்களில் தைரியமாக முடிவெடுப்பது
- விரோதமான கலாச்சாரத்தில் ஆவியில் நிறைந்து காண்பிப்பது
- உங்களுடைய பேரப்பிள்ளைகள் அவர்களுடைய உதவியோடு உலகத்தைப் பகுத்தரிவது

4. தாத்தா பாட்டி தரநிலை நிறுத்துபவராக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (சங்கீதம் 92:12,14-15)

   தரநிலை நிறுத்துபவர்

   மாதிரியாக இருப்பது, போதிப்பது மற்றும் உற்சாகப்படுத்துவது

   - விசுவாசத்தை ஊக்குவிக்க
   - சீரான நேர்மை
   - தனிப்பட்ட ஒழுங்கு
   - உறுதியான பொறுமை
   - தொற்றும் தைரியம்

தாத்தா பாட்டி என்ன செய்யக்கூடாது?

1. பிள்ளைகளின் திருமண வாழ்க்கையில் தாத்தா பாட்டி குறுக்கிடக்கூடாது.
   - முதல் திருமண வாழ்க்கை தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒரு ஆண், தாய் தந்தையை விட்டு, தன் மனைவியோடு இசைந்திருப்பான். இருவரும் ஒருவராய் காணப்படுகிறார்கள். பெற்றோர்களோ கணவன் மனைவியின் பெற்றோர்களோ அவர்களுடைய திருமண வாழ்க்கையில் தலையிடக்கூடாது, அவர்களின் பிள்ளைகள் இருந்தால் கூட.
   - அவர்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்று தாத்தா பாட்டி அவர்களுக்கு சொல்ல முயற்சிக்கக்கூடாது, அவர்களே கற்று கொள்ள விட்டு விட வேண்டும்.
   - பேரப்பிள்ளைகளின் பாதுகாப்பு காரியங்கள் எழும்புமானால், அவற்றை குறித்து பிள்ளைகளிடம் பேசலாம்.
   - அவர்கள் பிள்ளைகளை வளர்த்த வழியிலேயே தங்கள் பேரப்பிள்ளைகளையும் அவர்கள் வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தக்கூடாது.

கலந்துரையாடல் கேள்விகள்

1. பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை வளர்க்கும் காரியங்களில் தாத்தா பாட்டி தலையிட்டால் என்னவாகும்?
2. தாத்தா பாட்டி குறித்தான உதாரணம் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது, நல்ல மற்றும் கெட்ட தாத்தா பாட்டி. ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் கொடுக்கவும். அவர்களுடைய வாழ்விலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம் என்று கலந்துரையாடவும்.

நாள் 5: இளம் தாய்மார்களுக்கான பயிற்சியின் கோட்பாடுகள்

வாசிப்பு: யாக்கோபு 1:5

பிள்ளைகளை பயிற்சிப்பது சுலபமான காரியம் கிடையாது. மிகவும் கவனமாக செய்ய வேண்டிய காரியம் ஆகும். பரிசுத்தமாக பிள்ளைகளை வனைவது, இறவாத ஆவியில் வனைவது. இந்த பிரதான காரியத்தைச் செய்ய, நாம் யாக்கோபு 1:5 சுதந்தரிக்க வேண்டும்.

பிள்ளைகளை பயிற்சிப்பதற்கான கோட்பாடுகள்

1. போதிப்பதை விட மேலானது பயிற்சி
   ஒரு பிள்ளை தான் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்துக் கொள்ளவும் புரிந்துக் கொள்ளவும் போதனை உதவுகிறது. பயிற்சிகள் இதற்கு உதவியாக இருக்கிறது. போதனை பிள்ளையின் சிந்தையில் செயல்படுகிறது. பயிற்சிகள் பிள்ளையின் சித்தத்தில் செயல்படுகிறது.

2. சுகப்படுத்துவதை விட தடுப்பது மேலானது
   தவறுகளை தடுக்க உதவ பிள்ளைகளை கண்காணிப்பது உண்மையான பயிற்சி. அவர்களுடைய தவறுகளை சரிப்படுத்த எண்ணம் கொண்டு கண்காணிப்பது அல்ல. உண்மையான பயிற்சியின் மேலான நோக்கம், பிள்ளைகள் கீழ்ப்படிந்து, சரியானதை செய்ய உதவுவது, அவர்கள் சுலபமாக மற்றும் வெற்றிகரமாக மற்றும் மனமகிழ்ச்சியோடு செய்ய வேண்டும்.

3. கோட்பாடுகள் பழக்கமாக இருக்க வேண்டும்
   பிள்ளைகளின் சிறுவயதில், அவர்களுடைய சரீர வளர்ச்சி மற்றும் மாற்றங்கள் தொடரும். இக்காலகட்டத்தில் அவர்களுடைய வாழ்நாள் பழக்கங்களை உருவாக்க முடியும். சில சுலபமான மற்றும் இயற்கையான பழக்கங்களை உருவாக்க உதவ முடியும். இது உருவான பிறகு, சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிய பிள்ளைகளை ஆயத்தம்பண்ண இது வழிவகுக்கும்.

4. கற்றுக்கொள்ள முக்கியமானது சரியான நடத்தையை உருவாக்குவது
   பிள்ளைகளின் சிறுவயதில், அவர்களுடைய உணர்வுக்கு மிகவும் பாதிப்புள்ளவர்களாக இருப்பார்கள். இதனால், பெற்றோர்கள் சரியானதைச் செய்ய முயற்சிக்க வேண்டும். நல்லதைச் செய்ய பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும். இது இல்லாமல், பழக்கத்துக்கு மதிப்பு இருக்காது. இதன் மூலம், பிள்ளையின் வாஞ்சையின் சித்தம், பழக்கமாக மாறும்.

5. கட்டளைக்கு மேலானது எடுத்துக்காட்டு
   நாம் சிந்திப்பது அல்ல நாம் வாழ்வதே மாற்றத்தை உருவாக்கும். இது நம்முடைய விருப்பமோ அல்லது எண்ணமோ அல்ல, ஆனால் நம் பிள்ளைகளை பயிற்சிக்க நம்முடைய சித்தம் மற்றும் திட்டம். பூரணமாக வாழும் போது, நாம் அவைகளை நேசிக்கிறோம், அது நம் வாழ்வில் ஒரு பங்காக இருக்கிறது. இதன் மூலம் சிறு பிள்ளைகள் அதை நேசிக்கவும் அதை சுதந்தரித்துக் கொள்ளவும் உதவுகிறோம்.

6. ஆளும் சட்டத்தை விட அன்பு மேலானது
   பிள்ளைகளை பயிற்சிக்க சுயநலம் இல்லாத தியாகம் நிறைந்த வாழ்க்கை தேவை. நம்மை நேசிக்காத அன்பு, கொடுக்கும் வாழ்வு. அற்புதமான தாய் அன்பின் பரிசை தேவன் நமக்கு தந்திருக்கிறார். அந்த அன்பு சரியாய் கொடுக்கப்படும் போது, அது தேவனின் அன்பாக மாறுகிறது. அன்பு பயிற்சியின் இரகசியம்.

கலந்துரையாடல் கேள்விகள்

1. ஒரு பிள்ளையின் சிறு வயதில் உருவாக்கக்கூடிய சில நல்ல பழக்கங்கள் யாவை?

2. பயிற்சியின் வல்லமை நாம் எப்படி இருக்கிறோம் மற்றும் என்ன செய்கிறோம் என்பதில் இருக்கிறது. நாம் சொல்வதில் அல்லது போதிப்பதில் அல்ல. ஏற்றுக்கொள்கிறீர்களா? பகிர்ந்துக் கொள்ளவும்.

3. அன்பு இல்லாமல் சட்டதிட்டம் படைக்கப்படும் போது என்னவாகிறது?

நாள் 6: வாலிபர்களை வளர்ப்பது: நவீன உலகம், இன்டர்நெட் மற்றும் பல

வாசிப்பு: நீதிமொழிகள் 2:11

புதிய மேம்பாடுகள் வாலிப பிள்ளைகளுக்கு அதிகமான பாதிப்பை கொடுக்கிறது. வெளியில் நடக்கிறதை நாம் கண்டும் காணாமல் இருக்க முடியாது அல்லது நம் வாலிபர்களை அவர்களுடைய சாதனங்களோடு விட்டு விடவும் முடியாது. சமூக வலைதளம் மற்றும் இணையம், நம் பிள்ளைகளுக்கு உதவிகள், வழிநடத்தல் மற்றும் எது சரி மற்றும் தவறு என்று விளக்கமும் அதிகமாக தேவைப்படுகிறது.

1. எவ்வளவு தனியுரிமை என் வாலிப பிள்ளைக்கு நான் கொடுக்கலாம்?
   இல்லை. உங்கள் வாலிப பிள்ளையின் கணினியில் போகிறதையும் வருகிறதையும் தெரிந்து கொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு. திறப்பான இடத்தில் மட்டுமே அவர்கள் கணினியை பயன்படுத்த, வீட்டு சட்டம் போடவும். எல்லாரும் பார்க்க முடிந்த இடத்தில், படுக்கையறையிலேயோ அல்லது கதவுக்குப் பின்னாலையோ அல்ல. இது எனக்கும் என் நண்பர்களுக்கும் உள்ள இரகசியம் என்று உங்களுக்கு பதில் கிடைத்தால், நீங்கள் அதை குறித்து சோதிக்க வேண்டும். சட்டம் அவர்களுக்கு பிடிக்கவில்லை என்றால், அது சவுகரியத்துக்குதான் உரிமை இல்லை என்று அவர்களுக்கு வலியுறுத்தவும்.

2. சமூக வலைதளங்களில் புகைப்படங்களை போட நான் என் பிள்ளையை அனுமதிக்கலாமா?
   அதிகமான நேரத்தை வாலிப பிள்ளைகள் சமூக வலைதளங்களில் கழிக்கலாம், ஆனால் இது முக முகமாக உரையாடும் காரியம் அல்ல. அவர்களை குறித்தும் அவர்களுடைய குடும்பங்களை குறித்ததுமான பல காரியங்களை பிள்ளைகள் வெளிப்படுத்தக் கூடும். இந்த காரியங்கள் உலகமெங்கும் ஒரே நொடியில் சென்றடைய வாய்ப்புண்டு, அதை திரும்ப எடுக்க முடியாது. பாதி உடையில் அல்லது முழுமையாக உடை அணியாமல் படங்கள் எடுக்க யாரையும் அனுமதிக்கக்கூடாது என்று அவர்களுக்கு நினைவுறுத்தவும். தவறான காரியங்கள் அல்லது தனிப்பட்ட சந்திப்புகள் குறித்தான காரியங்கள் எழும்பினால் உங்களிடம் அதை தெரிவிக்க வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு புரிய வைக்கவும்.

3. கைத்தொலைபேசியை குறித்து நான் என்ன மாதிரியான சட்டங்களை போடலாம்?
   அதிகமான கைத்தொலைபேசிகள், தொலைபேசிக்கும் மேலானவைகளாக இருக்கிறது. கணினியை போல பல தன்மைகள் கொண்டு இருக்கிறது. சாதனங்களை பகிர்ந்து கொள்ளவும், இன்டர்நெட் உபயோகிக்கவும், படங்கள் வீடியோக்கள் எடுக்கவும் உதவுகிறது. அதில் வருகிறதும் செல்கிறதுமான காரியங்கள் மிகவும் சவால் நிறைந்ததாக இருக்கிறது. இது சவுகரியத்துக்காக, வாலிபர்கள் கைத்தொலைப்பேசி வைத்திருப்பது உரிமை இல்லை.

உங்கள் வாலிப பிள்ளையோடு கீழ்க்காண்பவைகளை குறித்து நீங்கள் உரையாட வேண்டும்:

1) ஒரு மாதத்தில் எத்தனை அழைப்புகள் மற்றும் குருஞ்செய்திகள் பயன்படுத்த முடியும்.
2) யாருக்கு அழைக்க முடியும், எவ்வளவு நேரம் மற்றும் எப்போது. தொலைப்பேசிக்கு ஓய்வு தேவை.
3) அழைப்புகள் மற்றும் குருஞ்செய்திகளின் எதை குறித்து இருக்கிறது – தவறான செயல்கள் குறித்து அவர்கள் அனுப்பவோ பெறவோ கூடாது.
4) வாகனம் ஓட்டும் போது தொலைபேசியில் பேசவது மற்றும் குருஞ்செய்திகள் அனுப்புவது.

5) கண்காணிப்பு நடக்கும். தனியுரிமை இல்லை.
6) தவறான காரியங்களுக்கு தொலைபேசியை பயன்படுத்துவது.

கலந்துரையாடல் கேள்விகள்

கீழ்க்காணபவைகளை குறித்து கலந்துரையாடவும் பகிர்ந்து கொள்ளவும்:

1. என் பிள்ளை கேட்க விரும்பும் இசை, எனக்கு பிடிக்கவில்லை என்றால் என்ன செய்யலாம்?

2. என் வாலிப பிள்ளை விரும்பும் படத்தை, தொலைகாட்சி நிகழ்ச்சியை மற்றும் மற்றவைகளை பார்க்க நான் எவ்வளவு அனுமதி கொடுக்கலாம்?

நாள் 7: ஏன் பிள்ளைகள் இரட்சிக்கப்படவில்லை?

வாசிப்பு: 1 தீமோத்தேயு 3:2,4,5,12

இல்லத்தில் பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கான ஒற்றுமையை குறித்து இந்த வசனங்கள் நமக்கு மறுபடியும் நினைவூட்டுகிறது. இல்லத்தில் பெற்றோரின் அதிகாரம் தோல்வியடைந்த நிலையில், விசுவாசம் இல்லாத கட்டுக்கடங்காத பிள்ளைகளுக்கு போதிக்க, பவுலை தொடங்க சொல்லி பரிசுத்த ஆவியாவன் போதிக்கிறார். வீட்டில் தோல்வியடைந்த பெற்றோர்கள் திருச்சபை நிர்வாகத்துக்கு தகுதியில்லாதவர்கள்.

வீட்டில் பெற்றோர்கள் ஆட்சி தோல்வியடைவதற்கான சில காரணங்கள்

1. சுய-கட்டுபாடு குறைவு
   இல்லத்தில் பிரச்சனை, தலைமைத்துவத்தில் பிரச்சனை என்பதை வெளிப்படுத்துகிறது. வீட்டு ஆட்சியின் இரகசியம் சுய-ஆட்சி. நம் பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமே, நாம் முதலில் அப்படி இருக்க வேண்டும். பல கிறிஸ்தவ பெற்றோர்கள் அன்றாட வாழ்க்கையின் சுய-கட்டுபாட்டில் வித்தியாசமாக இருக்கிறார்கள். அவர்களுடைய உரையாடல் மற்றும் செயல்கள், அவர்களுக்கு பிடித்தவை மற்றும் பிடிக்காதவை, நேரத்துக்கு ஏற்றார்போல் அவர்கள் உணர்ச்சிகள் இருக்கிறது. அவர்களின் இஷ்டத்துக்கு அவர்களுடைய வார்த்தைகளும் செயல்களும் இருக்கிறது. தேவனின் சித்தத்துக்கான ஊழியனின் பாகத்துக்கு முரண்பாடாக இருக்கிறது. ஏசாயா 30:15, வெற்றிகரமான ஆவிக்குரிய வாழ்வுக்கு, சுய-கட்டுபாடு முதல் படி என்று நாம் அறிந்திருக்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவ பெற்றோர்களும் இதை கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது, நாம் நம் பிள்ளைகளை வழிநடத்த முடியும்.

2. அதிகாரத்தில் தோல்வி
   பெற்றோரின் பங்கான ஆட்சி செய்யும் கடமையை புறக்கணிப்பது.

   இந்த தோல்விக்கான காரணங்கள்
   1) பெற்றோரின் பங்கை அறியாமல் இருப்பது – அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிள்ளைகளின் ஆத்துமா, சித்தம் மற்றும் பாத்திரத்தை முக்கியமாக கருதாமல் இருப்பது.
   2) இந்த புறக்கணிப்பு தவறான கட்டளைகளில் முடியும். பிள்ளைகளின் பெலமான சித்தம் இதில் காணப்படும். இந்த பிள்ளைகள் பிற்காலத்தில் கீழ்ப்படியாமல் போவார்கள்.
   3) மற்றவர்களோட, சுலபமான பெலவீனம் மற்றும் சோம்பேறி தனம்.

3. விசுவாசம் குறைவு
   தேவனிடம் முழுமையாக ஒப்புக்கொடுத்த பெற்றோர்களுக்கு தேவனின் விசுவாசம் மற்றும் உறுதி கொடுக்கப்படும். தேவனே அவருடைய பங்கை செய்வார். நாம் முழுமையாக நம்மை மற்றும் நம் பிள்ளைகளை தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கும் போது, நம் பிள்ளைகளை பயிற்சிப்பதில் தேவனே உடன்படிக்கை-உதவியாக இருப்பார். நம் பிள்ளைகளின் வெற்றிக்கு உறுதியான உத்தரவாதமாக இருப்பது தேவனுடனான நம்முடைய ஜெபத்தின் வல்லமை.

முடிவுரை

பிள்ளைகளை வளர்க்கும் காரியத்தில் பெற்றோர்கள் தேவனின் சேவகர்களாக இருக்கிறார்கள் - அவருடைய உடன் வேலையாட்களாக. அவரோடு சேர்ந்து ஊழியம் செய்தின் அர்த்தம் அவரோடு இணைந்து நடப்பது. நமக்கு அருளப்பட்ட ஊழியம் நாம் அறிந்திருப்பதை விட பரிசுத்தமானது. தேவனுக்கான மற்றும் பரத்துக்கான சித்தத்தை பயிற்சிப்பது மிகவும் சிறப்பான பொறுப்பாகும். நாம் பெற்றோராக இருந்தால், இந்த கடமை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்கு நன்றி செலுத்துங்கள், போதுமான கிருபை நமக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது வாக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது. நம் இல்லத்தை மற்றும் நம் வாழ்க்கையை தேவன் ஆளுகைக்கு நாம் ஒப்புக்கொடுத்தால், அவர் அரசாளுவார். பரிசுத்த ஆவியின் உதவியோடு பிள்ளைகளின் சித்தம் தேவனிடத்தில் நிறைவேறும்.

கலந்துரையாடல் கேள்விகள்

1. தேவ பக்தியுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் தவறான வழியில் செல்வதைக் குறித்து நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லா குற்றத்திற்கும் பெற்றோர்களா காரணம்? (1 தீமோத்தேயு 3:2,4,5,12)

2. நம் பிள்ளைகளை நாம் ஆளும் காரியத்தில் நாம் பெறும் பயிற்சி, திருச்சபையில் நம்முடைய தலைமைத்துவத்துக்கு எப்படி சிறப்பான ஆயத்தமாகிறது?

References/சாதனங்கள்:


1. Families Matter by Wrutheran Sinnadurai

2. Ministering to Your Family by Kenneth E. Hagin and Kenneth Hagin Jr.

3. How to Bring Your Children to Christ by Andrew Murray

4. Busy Mom’s Guide to Parenting Teens by Paul C. Reisser, M.D

5. Family Life Home Builders Couples Service by Dennis Rainey